(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 28 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஒற்றோபர் 09, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0061 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவுகளுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப் பயணங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறைநிரப்புச் செலவினம் என்பவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0067/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994 ஏப்பிறல் 25 ஆம் திகதியிலுள்ளவாறும், இன்றைய திகதியிலுள்ளவாறும், இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல துறைமுகங்களிலிருந்தும் பெறப்பட்ட இலாபம் எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி (i) இன் பிரகாரம் 1994 ஏப்பிறல் 25 ஆம் திகதியிலுள்ளவாறும் இன்றையத் திகதியிலுள்ளவாறும் டொலரின் நாணயப் பெறுமதி என்னவென்பதையும்,

(iii) மேற்சொன்னவற்றிற்கு சமமான டொலர் பெறுமதி என்னவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) 1994 ஏப்பிறல் 25 ஆம் திகதியிலுள்ளவாறும், இன்றையத் திகதியிலுள்ளவாறும் இலங்கைத் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்புகள் என்னவென் பதைத் தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0073/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார திணைக்களத்தில் பாடசாலை பற்சிகிச்சை உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடைந்த திகதியை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றது என்பதையும்,

(ii) 1984 ஆம் ஆண்டில் முதன்முதலில் நடத்தப்பட்ட இப்பரீட்சையில் பாடசாலை பெண் பற்சிகிச்சை உத்தியோகத்தர்கள் 86 பேர் சித்தியடைந்து பதவியுயர்வு பெறத் தகுதி பெற்றனர் என்பதையும்,

(iii) இந்த 86 பேருக்கு பதவியுயர்வு வழங்காமல் 1988 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பாடசாலை பெண் பற்சிகிச்சை உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்குதல் வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடைந்த திகதியை அடிப்படையாக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப்பட்டியல் மூலம் நடைபெற வேண்டும் என S. C. Application 104/91 ஆம் இலக்கமுடைய உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆயினும், 1984 ஆம் ஆண்டில் பாடசாலை பெண் பற்சிகிச்சை உத்தியோகத்தர் களின் வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடைந்த பெண் உத்தியோகத்தர்களுக்கு இற்றைவரை உரிய திகதியில் உரிய பதவியுயர்வு கிடைக்காததால் அதைத் திருத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0146 / '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தை ஏற்றதன் பின் ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0324/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பாடசாலை அதிபர்கள் சேவையின் 2- II தரத்திற்கு நியமிக்கும் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2006 ஆம் ஆண்டில் ஒரு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) 2007.09.10 ஆம் திகதியாகின்றபோது மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்ததா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பரீட்சையின் அடிப்படையில் மத்திய மாகாண கல்விச் செயலாளரால் 2007 செத்தெம்பர் மாதத்தில் நேர்முகப்பரீட்சை ஒன்று நடத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி பரீட்சையின் பொருட்டு மத்திய மாகாணத்திலிருந்து தோற்றிய விண்ணப்பதாரர்களினதும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களினதும் பெயர்ப்பட்டியலொன்றைத் தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(உ) நேர்முகப் பரீட்சைக்காக மேற்படி பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட விதத்தினையும் மேற்படி நேர்முகப்பரீட்சை சட்டரீதியானதா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0325 / '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, கோட்டேகொட தபால் நிலையம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி நிறுவனமொன்றுக்கோ தனியார் ஒருவருக்கோ கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுளதா,

(ii) அவ்வாறாயின், அது எந்த நபருக்கு அல்லது எந்நிறுவனத்துக்கு,

(iii) எந்தக் காரணத்துக்காக

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்காணி மீனவர் நூல் நிலையமொன்றுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0328 / '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) படல்கும்புற, 11 ஆம் கட்டை, இலக்கம் 265 முகவரியில் வதியும் திரு. எச். எம். குணரத்ன 2002 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் படல்கும்புற பிரதேச சபையின் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டாரென்பதையும்,

(ii) 2002.04.15 ஆம் திகதியில் இருந்து 2006.04.15 ஆம் திகதி வரை மேற்படி பிரதேச சபையில் பணியாற்றினாரென்பதையும்,

(iii) அக்காலப்பகுதியில் ஆசிரியர் சேவையின் லீவுக்காக அனுமதி பெற்றிருந்தாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) படல்கும்புற மொ/நிஸ்ஸங்க தேசிய பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றிக் கொண்டிருந்த இவருக்கு 2006.04.15 ஆம் திகதியில் இருந்து இற்றைவரை மாதச்சம்பளமும் பதவியுயர்வும் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆசிரியர் சேவையில் லீவுக்கான அனுமதி பெற்றுக்கொள்ள முறையாக நடவடிக்கை மேற்கொண்டுள்ள இந்த ஆசிரியருக்கு நிலுவைச் சம்பளத்தையும் பதவியுயர்வையும் வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0464/ '08

8.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுனம கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0465/ '08

9.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அங்குனுகொலபெலஸ்ஸ கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0466/ '08

10.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உடயால கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண் ணிக்கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0511/ '08

11.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது உடுபத்தாவ பிரதேச சபையில் தலைவராக பணியாற்றும் திரு. நந்தன பாலசூரிய அப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன்னர் உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில் உடுபத்தாவ சமுர்த்தி வங்கி வலயத்தில் முகாமையாளராகப் பணியாற்றியுள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இவர் உடுபத்தாவ சமுர்த்தி வங்கி வலயத்தில் முகாமையாளராக பணியாற்றிய காலத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் (500,000 ரூபா) மோசடி செய்தமை காரணமாக தொழிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார் என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி மோசடி சம்பந்தமாக சமுர்த்தி அதிகாரசபை இவருக்கெதிராக ஆரம்பித்த விசாரணையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இம் முறைப்பாட்டாளராகிய சமுர்த்தி அதிகாரசபையின் சார்பில் பணியாற்று கின்ற விசாரணை உத்தியோகத்தர் திரு. சரத் விஜேவர்தன, உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் திரு. அநுரவங்ச, ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் திரு. பொல்பித்திகம ஆகியோர், மேற்படி விசாரணையை துரிதமாக மேற்கொள் வதற்காக பிரதேச செயலாளருக்கு போதிய ஒத்துழைப் பினைப் பெற்றுத்தராமை, மற்றும் பிரதிவாதிகளுக்கு அனுகூலம் கிடைக்கக் கூடிய வகையில் செயலாற்று கின்றமை பற்றி அவர் அறிவாரா?

(உ) மேற்படி விசாரணையை பக்கச்சார்பற்ற முறையில் துரிதமாக மேற்கொள்ள அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(ஊ) மேற்படி விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்ட தரவுகளை அவர் இச்சபைகக்கு அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0512 / '08

12.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத, மின்கலத்தின் விசையை கொண்டு இயங்கும் மோட்டார் வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வாகனங்கள் எந்நாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப் படுகின்றதென்றும் அவற்றின் உள்நாட்டு முகவர்கள் யாவரென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையில் வாகனங்களினால் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தடுத்து நிறுத்த மின் கலத்தைக் கொண்டு இயங்கக்கூடிய வாகனங்கள் பொருத்தமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) சுற்றாடல் நேயமிக்க மேற்படி மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதித் தீர்வை சலுகைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா,

(ii) இவ்வாறான வாகனங்களை இலங்கையில் பொருத்துவதற்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதை

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0513/ '08

13.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்கமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு அரிசி இறக்குமதி செய்த நாடுகள், இறக்குமதி செய்த அரிசியின் அளவு, ஒருகிலோ அரிசி கொள்வனவு செய்யப்பட்ட விலை, அரிசி இறக்குமதி செய்த உள்நாட்டு முகவர்களின் பெயர்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் இவ்வரிசி ஒரு கிலோ விற்பனையாகும் விலை என்ன என்பன யாவை,

(ii) 2007 ஆம் ஆண்டு இலங்கையில் அரச களஞ்சியங்களில் இருந்த அரிசியின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்த அரிசியினை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதற்காக வழங்கப்பட்ட நிறுவனங்கள், இந்நிறுவனங்களுக்கு ஒரு கிலோ அரிசி பெற்றுக்கொடுக்கப்பட்ட விலை மற்றும் உள்நாட்டுச் சந்தையில் இவ்வரிசி விற்பனை செய்யப்பட்ட விலை தனித்தனியாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0536/ '08

14.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடுவெல பிரதேச செயலகப் பிரதேசத்தில் அம்பலன்வத்த எனும் மல்பெரி தோட்டத்தில் அரசாங்கத்துக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு,

(ii) இக்காணிகளை ஏதேனும் தேவைக்காக வேறு தரப்பினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், காணிகளின் அளவு வீதம் என்ன,

(iv) அது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது,

(v) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒரு பகுதியை விற்கத் தீர்மானித் திருந்தால் சம்பந்தப்பட்ட காணியின் அளவும் விற்பதற்கான காரணமும் யாது,

(vi) விற்பனை செய்யாமல் வேறேதேனும் அடிப்படையின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடுவெல பிரதேசத்தில் விளையாட்டு மைதானமொன்று தேவையாக இருக்கின்றதென்பதையும் அதற்குப் பயன்படுத்த வேறு அரச காணிகள் இல்லையென்பதையும்,

(ii) அதற்காக இக்காணியைப் பெற்றுத்தரும்படி பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அதன் பொருட்டு காணி வழங்க முடியாவிட்டால் அதன் காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0633/ '08

15.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, தவலம, ஹல்விட்டிகம குடியேற்றத்தைச் சேர்ந்த 130 E.S. 1 ஆம் இலக்க தற்காலிக உரிமம் திரு. கே. டபிள்யூ. ஜயசேகர என்பவருக்கு 1980.10.14 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) நான்கு எல்லைகளாக வடக்கே ரத்னாயக்கவின் காணியும், தெற்கே டபிள்யூ. ஜீ. பியதாஸவின் காணியும் கிழக்கே பாலுகல வீதியும் மேற்கே பிரதான வீதியுமாக அமைந்துள்ளதென்பதையும்,

(iii) இதற்கிடையில் ஹல்விட்டிகல சுதர்மாராமயவை அடுத்த காணியின் நான்கு எல்லைகளை மாற்றி இலட்சினையொன்று இல்லாத சுறுக்கக் கையொப்ப மிடப்பட்ட உரிமமென்று பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக மாகாண காணி ஆணையாளரின் ඉකො/ගා/තව/130ஆம் இலக்க விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு இதுவரை தவலம பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் இது தொடர்பாக சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் 1706 ஆம் இலக்கப் பிரேரணைக்கான රාපරි/විම/දප/17/86/07 ஆம் இலக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் சில தீர்மானங்கள் சரியாயிருப்பினும் போலியான முறையில் மாற்றம் செய்யப்பட்ட உரிமத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்துக்கு பிழையானதொரு அறிக்கையைச் சமர்ப்பித்தல் மற்றும் இந்த ஆவணங்களின் பிரதிகள் கோவையில் காணப்படாமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— ஒதுக்கீடு,— 2009 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்தசில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்தகைய செயற்பாடுகளுக்கான செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— பிரதேசிய சங்வர்த்தனை வங்கி,— 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள், ஊழியர்களை உள்ளீர்த்ததாக பிரதேசிய சங்வர்த்தனை வங்கியைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆன ஒரு சட்டமூலம்.

3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்),— 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூராயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*2.

இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*4.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

தேசிய பொதுவழிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*8.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*9.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*23.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*24.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை

யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---